11 OCT 2014

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (ஆகஸ்ட் 2014)

## EDU/S 3101 Students Adjusment and Pre School Education

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

---

01.(அ) "வகுப்பறையில் நெறிபிறழ்வான மாணவர்கள் காணப்படும்போது கற்றற் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க?

(13 புள்ளிகள்)

(ஆ) நெறிபிறழ்வான மாணவர்களுக்கு எவ்வாறான பரிகாரச் செயற்பாடுகளை நீர் மேற்கொள்வீா் என்பதை விளக்குக?

(12 புள்ளிகள்)

02.(அ) மாணவர்களின் பொருத்தப்பாட்டைச் சீர்குலைக்கும் பாடசாலைக் காரணிகளையும், வெளிச்சூழற் காரணிகளையும் முன்வைக்குக?

(12 புள்ளிகள்)

(ஆ) நீர் ஓர் ஆசிரியர் என்ற வகையில் மாணவர்களின் பொருத்தப்பாட்டைச் சீர்குலைக்கும் காரணிகளுக்கு எவ்வாறான தீர்வுகளை மேற்கொள்வீர் என்பதை விளக்குக?

(13 புள்ளிகள்)

03.(அ) வழிகாட்டல் ஆலோசனை சேவை அணுகுமுறைகளுள் தனியாள் மையக்கொள்கை பெறும் முக்கியத்துவத்தை விளக்குக?

(12 புள்ளிகள்)

(ஆ) தொழில் வழிகாட்டல் சேவையினூடாக அடையப்படும் முக்கிய நோக்கங்களை ஆராய்க?

(13 புள்ளிகள்)

04.(அ) தொழில் வழிகாட்டல் பற்றிய கொள்கைகளுள் கின்ஸ்பேர்கின் (Ginzberg) தொழில் வாழ்க்கைக் கொள்கை பற்றி விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) ஆலோசனை சேவைக்காகத் தரவு சேகரிக்கும் நுட்பங்களில் வினாக்கொத்து முறையினால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்க?

(15 புள்ளிகள்)

05.(அ) இலங்கையின் முன்பள்ளிக்கல்வி தொடர்பாகக் காணப்படும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்க?

(10 புள்ளிகள்)

(ஆ) பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையினால் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் பெற்றுக்கொள்ளும் நன்மைகளைக் குறிப்பிடுக?

(15 புள்ளிகள்)

06. பின்வருவன பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.

(i) பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையினுள் உள்ளடங்கும் ஆளணியினரின் பணிகள்.

(ii) இலங்கையின் முன்பள்ளிக் கல்விசார் செயற்பாடுகள்.

(iii) நடத்தை வாதக் கொள்கை அணுகுமுறை

(iv) தரவு சேகரிக்கும் நுட்பங்களில் பேட்டி காணல் முறை

(v) உளப்பகுப்பாய்வுக் கொள்கை

(5x5=25 புள்ளிகள்)

*****